செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.72 நாள் : 09.09.2023

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் உத்தரவின்பேரில்

சிக்கராயபுரம் கல் குவாரிகளில் தேங்கியுள்ள 0.350 TMC மழைநீரை செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை குடிநீர் வாரியம் தகவல்

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் உத்தரவின்பேரில் காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு அருகே சிக்கராயபுரத்தில் உள்ள 25-க்கும் மேற்பட்ட கல் குவாரிகளில் சுமார் 0.350 TMC மழைநீர் தேங்கியுள்ளது. இந்நீரினை செம்பரம்பாக்கத்திலுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுசென்று, சுத்திகரித்த பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது குவாரிகளில் தேங்கியுள்ள மழைநீர், செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லும் பணிகள் தொடங்கியுள்ளது. இதனால், வடகிழக்குப் பருவமழையின்போது கிடைக்கப் பெறும் மழைநீர் இக்கல்குவாரிகளில் சேமிக்கப்பட்டு இப்பகுதிக்கு அருகாமையிலுள்ள கிராமங்களுக்கு வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாமல் தடுத்திட முடியும்.

இக்குவாரிகளில் தேங்கியுள்ள மழை நீரினை DI இரும்பு குழாய்கள் மற்றும் HDPE பிளாஸ்டிக் குழாய்கள் மூலம் உயர் திறன் கொண்ட மோட்டார்கள் மற்றும் ஜெனரேட்டர் இயந்திரங்களைக் கொண்டு செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வதற்குத் தேவையான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த குவாரிகளில் தேங்கியுள்ள மழைநீரினை நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய சுத்திகரிப்பு பணிகள் மேற்கொண்ட பின்னர் செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்